# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 28 - 2017

- 8-வது சர்வதேச தொழில்முனைவோர் மாநாடு (Global Entrepreneurship Summit) தெலுங்கானா மாநிலத்தில் ஐதராபாத் நகரில் நவம்பர் 28 – 30 வரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை இந்தியா மற்றும் அமெரிக்கா இணைந்து நடத்துகிறது.

- நிதி அயோக் முதன்மை செயல் அதிகாரி அமிதாப் காந்த் சமீபத்தில் துவங்கியுள்ள "வழிகாட்டி பிரச்சாரம்/திட்டம்" (Mentor India Campaign) நாடெங்கிலும் உள்ள ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு தொழில்துறை சார்ந்த அனுபவபூர்வ அறிவை வழங்குவதாகும். இத்திட்டத்தின் மூலம் 900 "Atal Tinkering Lab" ஆய்வகங்களில் பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படும்.

- IIT பாம்பே மற்றும் IIT இண்டூர் நிறுவனங்கள், சிறுநீரக கோளாறுகளை கண்டறியும் உயரி-உணரிகளை உருவாக்கியுள்ளது. இது 8 நிமிடங்களுக்கு குறைவாக சிறுநீரகக் கோளாறுகளைக் கண்டறியும்.

- பெல்ஜியத்தின் ஸ்டாவேவோட்டிலுள்ள சர்க்யூட்-டி-ஸ்பா - ∴ப்ரான்கோரில் நடைபெற்ற 2017 ∴பார்முலா 1 கார்பந்தயத்தில் இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் வெற்றி பெற்றுள்ளார்.

- 2017- தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பின் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டம் காத்மண்டில் ஆகஸ்ட் 27 அன்று நடைபெற்றது. இதில் இந்திய அணி நேபாளத்தை தோற்கடித்து வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறந்த வீரருக்கான விருது விக்ரம் பிரதாப் சிங்கிற்கு வழங்கப்பட்டது.

- ஹரியானா மாநிலம் குருகிராமில் (Gurugram, Haryana) நடைபெற்ற இந்தியாவின் முதல் திருநங்கைகளுக்கான அழகிப் போட்டி (Miss Transqueen India 2017) நடைபெற்றது. இதில் கல்கத்தாவைச் சேர்ந்த நிடாஷா பிஸ்வாஸ் இந்திய திருநங்கை அழகி பட்டத்தை வென்றுள்ளார்.

OXFORD IAS ACADEMY ERODE CONTACT NO:8056964826 www.oxfordiasacademy.com

❖ அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை “ஹார்வி புயல்” (Hurricane Harvey) மணிக்கு 215 கி.மீ வேகத்தில் தாக்கி பெருமளவு சேதத்தை விளைவித்துள்ளது.

❖ இந்திய நேபாள எல்லையில் அமைந்துள்ள “மெச்சி ஆறு” (Mechi River) மீது பாலம கட்டுவதற்காக இந்தியா மற்றும் நேபாள நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

❖ குழந்தைகளுக்கு பாதுகாப்பு உரிமைகள் அளிக்கும் வகையில் “பாஸ்கோ” என்ற மின்னணு புகார் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் ஸ்துதி நாராயண் கக்கர் தெரிவித்துள்ளார்.

❖ “தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்திய அளவில் தூய்மைமிகு பள்ளிகளுக்கான தேசியவிருதுக்கு திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழநி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தேர்வாகியுள்ளது. இந்திய அளவில் 30 நகர்புற உயர்நிலை, மேல்நிலை பள்ளிகள் இந்த விருதுக்கு தேர்வாகியுள்ளன.

❖ இந்தியா, கனடா இருநாடுகளின் தபால் துறைகளும் இணைந்து தீபாவளியைக் குறிக்கும் விதமாக செப்டம்பர் 21-ம் தேதி தபால் தலையை கூட்டாக வெளியிடுகின்றன. இந்தியா – கனடா நாடுகளுக்கு இடையிலான கலாச்சாரத்தின் சின்னமாக தீபாவளிப்பண்டிகை குறிக்கும் விதத்தில் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

❖ கென்யா நாட்டில் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதற்கும், உள்நாட்டில் தயாரிக்கவும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கும் தடை விதித்துள்ளது. இதனை மீறி பயன்படுத்தினால் 38,000 டாலர் வரை அபராதம் விதிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

❖ கேமரூன், கினியா-பிசாவ், மாலி, தான்சானியா, உகாண்டா, எத்தியோப்பியா, மோரிடேனியா, மாலவி ஆகிய நாடுகளில் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.